பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

09 09 2025 TUESDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.
- குறைந்த செலவில் விரைவான நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
- தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழக அரசு ஈர்த்துள்ள முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்து, வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
- ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சிராக் ஷெட்டி – ரங்கி ரெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

புதுதில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த தேர்தல், மாலை ஐந்து மணியுடன் நிறைவடைந்தது.

இந்த தேர்தலில் இரு அவைகளின் உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்தனர்.

<<<<<<>>>>>

எல்லைகளை கடந்து மக்களுக்கான சேவைகளை மேம்படுத்துவதற்கான உள்கட்டமைப்பு வசதிகளின் அவசியம் குறித்து மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

துபாயில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், உலக அளவில் அஞ்சல் துறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

அஞ்சல் துறை மூலம் குறைந்த செலவில் விரைவாக நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் வகையில், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆதார் எண்ணுடன் ஜன்தன் மற்றும் அஞ்சல வங்கிகளில் 56 கோடி வங்கிக்கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் பெரும்பாலானவை பெண்களின் பெயர்களில் உள்ளதாகவும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், அனைத்துத்தரப்பு மக்களின் முன்னேற்றத்தை கருத்தில்கொண்டு மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

விளிம்பு நிலையில் உள்ள மக்கள், பழங்குடியினர், பெண்கள் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடு அடையும் வகையிலும் சம வாய்ப்புகளை பெறும் வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

*மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தைவிட, அவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் கற்பிப்பதே சிறந்த கல்வி முறை என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.*

*அரியலூரில் இன்று நடைபெற்ற மாநில அளவிலான மதிப்பீட்டு தேர்வுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்தார்.*

*கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களை கண்டறிந்து, அவர்களது கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில், இந்த மதிப்பீட்டுத் தேர்வு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.*

*நவீன தொழில்நுட்படத்தின் மூலம் பாடங்களை கற்கும் வகையில் 22 லட்சத்து 9 ஆயிரத்து 33 வகுப்பறைகள் இணையதள வசதியுடன் கூடிய ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றப்பட்டுள்ளதாக திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*திமுக ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட தொழில் முதலீடுகள், புதிதாக உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் குறித்து, தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முதலமைச்சர் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களின் மூலம் திரட்டப்பட்ட முதலீடுகள் குறித்த முழு விவரங்களை வெளியிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்த விவரங்களை மாநில அரசின் தொழில்துறை இணையதளத்திலோ அல்லது தமிழ்நாடு முதலீடு வழிகாட்டு நிறுவனத்தின் இணையதளத்திலோ பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் நிறைவேற்றப்பட்ட விவரங்களையும் மாநில அரசு தெரிவிக்க வேண்டும் என்று திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*<<<<<<>>>>>*

*காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில்தான் பல்வேறு மாநிலங்களின் ஆட்சி கலைக்கப்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.*

*தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு பிஜேபி முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்தார்.*

*தமிழகத்தில் ஆட்சி மாற்றம் கொண்டுவரும் வகையில், அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.*

*மாநில அரசின் செயல்பாடுகளை விமர்சிப்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு வருவது ஜனநாயக நடைமுறைக்கு விரோதமானது என்று திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.*

*இதன் காரணமாக, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவதுடன், வர்த்தகர்களுக்கும் சாதகமான சூழல் ஏற்படுத்தியதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக தென்காசி மாவட்டத்தை சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.*

*(Voice Byte – வர்த்தகர்கள் - 48 Sec. )*

*<<<<<<>>>>>*

*தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள், தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.*

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் – 48 Sec. )*

*<<<<<<>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 ஆயிரத்து தொள்ளாயிரத்து 97 பயனாளிகளுக்கு சுமார் 215 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று வழங்கினார்.*

------------

*கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதி மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திரு பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.*

--------------

*நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ”பெண் குழந்தைகளை காப்போம் – பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.*

---------------

*தருமபுரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை ஆட்சியர் திரு சதீஷ் தொடங்கிவைத்தார்.*

-----------------

*திருவாரூர் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நிலுவையில் உள்ள அனைத்து சிவில் வழக்குகளிலும் சமரச முறையில் தீர்வுகாணும் வகையில் வரும் 13-ஆம் தேதியன்று தேசிய மக்கள் நீதிமன்றம் நடைபெறவுள்ளது.*

---------------

*ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் மூன்று நாள் விற்பனை கண்காட்சியை ஆட்சியர் திருமதி சந்திரகலா இன்று தொடங்கிவைத்தார்.*

--------------------

*தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் அமைந்துள்ள குற்றால நாதர் திருக்கோவிலில் இன்று நடைபெற்ற வருஷாபிஷேகத்தில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.*

*<<<<<<>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

*ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சிராக் ஷெட்டி – ரங்கி ரெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-13, 18-21, 21-10 என்ற செட் கணக்கில், தைவானின் Hsiang Chiu – Wang Chi-lin இணையை வென்றது.*

-------

*சீனாவில் நடைபெற்றுவரும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ria Bhatia – பிரான்சின் Carole Monnet இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 7-6 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Hanna Chang – சீனாவின் Xiaodi You இணையை வென்றது.*

*<<<<<<END>>>>>*